ASS **மூன்றாம் பருவ தொகுத்தறி மதிப்பீட்டுத் தேர்வு – 2025**

**7 - ஆம் வகுப்பு**

# தமிழ்

காலம் : 2.30 மணி மதிப்பெண்கள் : 60

**I சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 5 X 1 = 5

1. காந்தியடிகள் எப்போதும் .......... பேசினார்.
   அ) வன்சொற்கள் ஆ) அரசியலை இ) கதைகளை ஈ) வாய்மையை
2. வயலில் விளைந்த முற்றிய நெற்பயிர்களை ........ செய்வர்.
   அ) அறுவடை ஆ) உழவு இ) நடவு ஈ) விற்பனை
3. .......... ஒரு நாட்டின் அரணன்று.
   அ) காடு ஆ) வயல் இ) மலை ஈ) தெளிந்த நீர்
4. தன்னாடு என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ...................
   அ) தன்னாடு ஆ) தன்மை + நாடு இ) தன் + நாடு ஈ) தன்மை + னாடு
5. 'அறம் + கதிர்' என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் .......... .
   அ) அறகதிர் ஆ) அறுகதிர் இ) அறக்கதிர் ஈ) அறம் கதிர்

**II கோடிட்ட இடம் நிரப்புக.** 5 x 1 = 5

6. திருநெல்வேலி ......... ஆற்றங்கரையில் அமைந்துள்ளது.
7. மரம் வளர்த்தால் ........... பெறலாம்.
8. 'இளமை' என்னும் சொல்லின் எதிர்ச்சொல் ......... .
9. இந்த வேலையை முடிக்க ஒரு கை குறைகிறது என்பது .......... ஆகுபெயர்.
10. கூடுகட்டத் தெரியாத பறவை ................ .

**III பொருத்துக.** 5 x 1 = 5

11. விளைநிலம் - உண்மை
12. விதை - இன்சொல்
13. களை - ஈகை
14. உரம் - அமைதி
15. சாந்தம் - வன்சொல்

SIVANANDHA K M.A.,B.Ed
GHS SANDHANAPALLI
KELAMANGALAM BLOCK
DENKANIKOTTA TK
KRISHNAGIRI DT
PH:9003373506

**IV கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஆறுக்கு மட்டும் விடை தருக.** 6 x 2 = 12

16. பாரி மகளிரின் பெயர்களை எழுதுக.
17. கொற்கை முத்து பற்றி எழுதுக.
18. அறக்கதிர் விளைய எதனை எருவாக இடவேண்டும் என முனைப்பாடியார் கூறுகிறார்?
19. உலகம் நிலை தடுமாறக் காரணம் என்ன?
20. ஒரு நாட்டுக்கு எவையெல்லாம் அரண்களாக அமையும்?
21. விடுதலைப் போராட்டத்தில் காயிதே மில்லத் அவர்களின் பங்கு பற்றி எழுதுக.
22. பொருளீட்டுவதை விடவும் பெரிய செயல் எது?



Padasalai.Net
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

23. ஒரு பெயர்ச்சொல் எப்போது ஆகுபெயர் ஆகும்?
24. பின்வரும் தொடரில் உள்ள உவமை, உவம உருபு, உவமேயம் கண்டுபிடித்து எழுதுக.
மயில் போல ஆடினாள்

**V எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி.** 2 X 3 = 6

25. உழவுத் தொழிலின் நிகழ்வுகளை வரிசைப்படுத்தி எழுதுக.
26. இரட்டைக் கிளவி, அடுக்குத் தொடர் – ஒப்பிடுக.
27. திருநெல்வேலிக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பு குறித்து எழுதுக.

**VI அடிமாறாமல் எழுதுக.** 4 + 2 = 6

28. அ) 'வையம் தகளியா' ............எனத் தொடங்கும் புதுமை விளக்குப் பாடலை எழுதுக.
ஆ) 'வினையால்' – எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

**VII ஏதேனும் ஒன்றனுக்கு விடை தருக.** 1 x 5 = 5

29. அ) உங்கள் ஊரில் நடைபெறும் திருவிழாவைக் காண வருமாறு அழைப்பு விடுத்து உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக. *(அல்லது)*
ஆ) என்னை கவர்ந்த நூல் – கட்டுரை வரைக.

**VIII ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்க.** 1 x 6 = 6

30. அ) "உண்மை ஒளி" படக்கதையைச் சுருக்கி எழுதுக. *(அல்லது)*
***ஆ) கீழ்க்காணும் சொற்களைப் பெயர்ச்சொல்லாகவும் வினைச்சொல்லாகவும் பயன்படுத்தி தொடர்கள் உருவாக்குக.***
கட்டு, படி, ஆடு

**IX அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 5 X 2 = 10

31. அ) என் தாயார் என்னை ....... காத்து வளர்த்து வந்தார்.
***(கண்ணை இமை காப்பது போல / தாயைக் கண்ட சேயைப் போல)***
ஆ) நானும் என் தோழியும் ............. இணைந்து இருப்போம்.
***(இஞ்சி தின்ற குரங்கு போல / நகமும் சதையும் போல).***
32. **கொடுக்கப்பட்டுள்ள ஊரின் பெயர்களில் இருந்து புதிய சொற்களை உருவாக்குக.**
அ) பட்டுக்கோட்டை ஆ) கன்னியாகுமரி
33. **கலைச்சொல் தருக.** அ) POET ஆ) AMBITION
34. **சரியான வினாச்சொல்லை இட்டு நிரப்புக.**
அ) முதல் ஆழ்வார்கள் ........... பேர்?
ஆ) நெல்லையப்பர் கோவில் ........... உள்ளது?
35. **சரியன இணைப்புச் சொல்லால் நிரப்புக.**
அ) குயிலுக்குக் கூடு கட்டத் தெரியாது ........... காக்கையின் கூட்டில் முட்டையிடும்.
**(அதனால் / மேலும்)**
ஆ) தமிழகத்தில் மழை பெய்து வருகிறது ........ இரண்டு நாள் மழை நீடிக்கும்.
***(ஏனெனில் / மேலும்)***

SIVANANDHA K M.A.,B.Ed
GHS SANDHANAPALLI
KELAMANGALAM BLOCK
DENKANIKOTTA TK
KRISHNAGIRI DT
PH:9003373506



Padasalai.Net
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com